[1982 செப்டம்பர் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன் வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11.30)

(இ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்,

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே நான் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன். காரணம் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து நிறைவேற்றி, தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த விற்பனை அங்காடிகளை ஒழுங்கு படுத்துவதற்கோ அல்லது அவற்றை ஒழுங்காக நடத்துவதற்கோ எந்த வழிமுறையையும் ஏற்படுத்த இதுவரையிலும் முன்வரவில்லை. அவற்றின் அமைப்பு விதித்துறைகளில் மேற்கு வங்காளம், அஸ்ஸாம், இமாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் செயலில் உள்ள சட்டங்களுக்கு ஏற்ப விரிவான திருத்தங்களைச் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்ற ஒரே காரணத்தை தேசீய கீதத்தை இசைப்பதுபோல் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த தனி அலுவலர்களின் நியமனத்தைத் தவிர்ப்பதற்கும் அங்கே தலைவர் தேர்வு நடத்துவதற்கும் ஏன் இந்த அரசு தயக்கம் காட்டுகிறது என்பது தெரியவில்லை. ஆகவே நான் இதை எதிர்க்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**5: அரசினர் ர்மனங்கள்.**

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவை விதி 30 (3)-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம்' என்பதனை ஒத்தி வைத்து, இனம் 5 அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்பதனை எடுத்துக் கொள்ளபெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது,

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள் – தொடர்ச்சி.

(உ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1982

**மாண்புமிகு திரு. சி, பொன்னையன்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து, மேற்படி சட்ட முன்வடிவு *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது, இப்போது அலுவல் வரிசையில் மாற்றம் செய்யப் பட்டு, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்று சொல்வதால், இதன் மீது உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு சிரமமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் குறித்து ஒரு 'காம்ரஹென்சிவ் ஆக்ட்' கொண்டுவர இருப்பதால், அதையும் படித்துப்பார்த்துவிட்டு, இந்தச் சட்டமுன்வடிவின் மீது கருத்துக்கள் கூறுவது பொறுத்த மாக இருக்கும்,

---

*1982, ஆகஸ்ட் 31 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.